**.மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி**
**அசல் வழக்கு எண். 124/2019**
**connected with**
**அசல் வழக்கு எண் 103/2019**

DW1 – ஜீவபாலன் த/பெ வீராசாமி
நாள்–27.02.2024

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

**குறுக்கு விசாரணை :**

எனது தாயார் இறந்துவிட்டார் என்றால் சரிதான். என்னுடன் பிறந்த சகோதர சகோதரிகள் உயிருடன் உள்ளார்கள் என்றால் சரிதான். என்னுடன் பிறந்த சகோதர சகோதரிகளை இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கை எனது தாயார் பெயரில் RTR உள்ளதால் வாரிசு அடிப்படையில் தான் உரிமை கோரி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். எனது தாயார் பெயரில் RTR பதிவு உள்ளதற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்த காலத்தில் தாவா சொத்திற்கு பகுதி செலுத்தியதற்கான எவ்வித ரசீதும் தாக்கல் செய்யவில்லை என்றால் கோயிலார் கேட்கவில்லை அதனால் பகுதி செலுத்திவில்லை.

பி.சா.ஆ.1 வரிசையில் 4 பகுதி ரசீதுகள் 2005ம் ஆண்டுக்கு முன்பு வழங்கப்பட்டவை என்றால் சரிதான். பி.சா.ஆ.1 வரிசையில் ஒரு பகுதி ரசீதானது வழக்கிற்கு பின்னிட்டு 2021–ல் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.சா.ஆ.1 வரிசையில் 3 பகுதி ரசீதுகள் DCB எண் 43 க்கு வழங்கப்பட்டது என்றால் DCB எண் 42 என்பதுதான் சரியானதாகும். DCB எண் 43 க்கு பகுதி செலுத்தியதாக ரசீது தாக்கல் செய்யப்பட்டிருந்தால் அவைகள் இவ்வழக்கு சொத்திற்கு சம்மந்தம் இல்லாதது என்றால் சரிதான். தாவா சொத்து அல்லாமல் வேறு நிலங்களும் வேலூர் தேவஸ்தானம் வைத்தியநாதசுவாமி கோயிலுக்கு

பாத்தியப்பட்டது உள்ளது என்றால் சரிதான். வழக்கு சொத்து அல்லாமல் கோயிலுக்கு பாத்தியப்பட்ட வேறு சொத்துக்கள் எங்கள் குடும்பத்தார் பெயரில் பகுதி ஏற்பட்டுள்ளதா என்றால் இல்லை.

DCB எண் 43 என்பது எனது தகப்பனார் பெயரில் வழக்கு சொத்து அல்லாமல் வேறு சொத்துக்களுக்கானது என்றும், நான் வழக்கிற்காக வேறு சொத்துக்கள் இல்லை என பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. பி.சா.ஆ.2 வரிசை ஆவணங்களில் 2 ரசீதுகள் பட்டா எண் குறிப்பிடாமல் வழங்கப்பட்டுள்ளதால் அவைகள் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல. பி.சா.ஆ.2 வரிசையில் பட்டா எண் குறிப்பிட்டு வழங்கப்பட்ட கிஸ்து ரசீதானது எனது தகப்பனாருக்காக வேறு சொத்துக்களுக்காக வழங்கப்பட்டது என்றால் சரியல்ல.

பி.சா.ஆ.3 வழக்கிற்கு பின்பு செலுத்தப்பட்ட பயிர் காப்பீடு ரசீது என்றால் சரிதான். பயிர் காப்பீடு செலுத்தும்போது சம்மந்தப்பட்ட கிராம நிர்வாக அலுவலர் வழங்கிய சிட்டா அடங்கல் மற்றும் முன்மொழிவு படிவம் இணைக்கப்பட்டு, பயிர் காப்பீடு வசூலிக்கப்பட்ட அலுவலகத்தால் முத்திரை இடப்பட்டிருக்கும் என்றால் சரியல்ல. பி.சா.ஆ.3 மற்றும் பி.சா.ஆ.4 இவ்வழக்கிற்கு தொடர்பில்லாதது என்றால் சரியல்ல. எனது தாயார் பெயரில் ஏற்பட்டுள்ள RTR ஆவணத்தின் அசல் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

எனது தாயார் வாதியான திரிபுரசுந்தரிக்கு குத்தகை உரிமை மாற்றி கொடுக்கும் போது எனது தாயார் பெயரில் இருந்த அசல் RTR உத்தரவானது வாதியிடம் ஒப்படைத்துவிட்டதாக வழக்குரையில் சொல்லியுள்ள நிலையில் அதைப்பொறுத்து ஏதேனும் கட்சி எடுத்துள்ளேனா என்றால் அவ்வாறு நாங்கள் எந்த ஆவணமும் ஒப்படைக்கவில்லை. வாதி தரப்பில் அசல் RTR உத்தரவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், வழக்கிற்காக நாங்கள் வாதியிடம் ஒப்படைக்கவில்லை என பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

வாதி தரப்பில் என்னென்ன ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும். அசல் வழக்கு எண் 103/2019 நிலுவையில் இருந்த போது எங்களுக்கும் வாதிக்கும் பிரச்சனை ஏற்பட்டு வைத்தீஸ்வரன் காவல் நிலையத்தில் குற்ற எண் 104/2019 ஆக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் அது பொய் புகாராகும். தாவா சொத்து 2005 முதல் வாதி திரிபுரசுந்தரி சுவாதீனத்தில் இருந்து வருகிறது என்றும், வாதியால் கோயிலாருக்கு DCB எண் 42–ல் பகுதி செலுத்தப்பட்டு வந்துள்ளது என்றாலும் சரியல்ல.

தாவா சொத்திற்கு எனது தகப்பனாருக்காக வாதியால் பகுதி செலுத்தியதாக ரசீது வழங்கப்பட்டு அது வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. கோயிலார் சாகுபடி செய்பவர்களிடமிருந்து தான் பகுதி தொகை பெறுவார்கள் என்றும், நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. தாவா சொத்திற்கான கிஸ்தும் வாதியால் 2005 முதல் 2019 ஆம் ஆண்டு வரை பட்டா எண் 1–க்காக வாதியால் செலுத்தப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல. 07.06.2019 –ல் வாதி RTR உரிமையை தனது பெயரில் மாற்றிக்கொடுக்க வட்டாட்சியரிடம் விண்ணப்பம் கொடுக்கப்பட்டு எங்களுக்கு அழைப்பாணை வந்தது என்றால் சரிதான்.

வாதியால் மோசடி ஆவணம் ஏற்படுத்திக்கொண்டதாக கட்சி செய்துள்ள நாங்கள் அது சம்மந்தமாக நான் ஏதேனும் நடவடிக்கை எடுத்தேனா என்றால் இல்லை. நாங்கள் குத்தகை உரிமையை மாற்றி கொடுத்ததாலும் அசல் RTR வாதியிடம் ஒப்படைத்துவிட்டதால் தான் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. தாவா எத்தனை புல எண்களுக்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் 2 புல எண்களுக்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வழக்கு சொத்தை பொறுத்து வாதிக்கு குத்தகை உரிமம் மாற்று பத்திரம் எழுதிக்கொடுத்துவிட்டு தற்போது எவ்வித ஆவணமும் எழுதிக்கொடுக்கவில்லை என பொய்யாக எதிர்வழக்காடி வருகிறோம் என்றால் சரியல்ல. வா.சா.2 மற்றும் வா.சா.3 ஆன பாலு மற்றும் சந்திரபாபு என்பவர்கள் எங்கள் உறவுக்காரரா என்றால் இருவருக்கும் உறவுக்காரர்கள் தான். பாலு மற்றும் சந்திரபாபுவிற்கு தாவா சொத்திற்கு அருகில் நிலங்கள் உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தை யார் சாகுபடி செய்து வருகிறார்கள் என்பது சாட்சிகளுக்கு தெரியும் என்றாலும் சரிதான். தாவா சொத்து உண்மையிலேயே எங்கள் வசத்தில் இருந்திருந்தால் RTR உத்தரவின் அசல் அல்லது நகலாவது தாக்கல் செய்திருப்பேன் என்றாலும் சரியல்ல. எனவே வாதிகள் தாக்கல் செய்த அசல் வழக்கு எண் 124/2019 தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றும், அசல் வழக்கு எண் 103/2019 தாவா தள்ளுபடி செய்யவேண்டும் என்றாலும் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.